DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.153/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

Name : துரைராஜ்
Father/ Husband Name : சுப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **10.07.2023**

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் செட்டியனேந்தலில் குடியிருந்து விவசாயம் மற்றும் வியாபாரம் செய்து வருகிறேன். எனது அக்காவை அதங்குடியில் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். எனது அக்காவின் ்மகன்களுக்கு சொந்தமான வீடு தேவகோட்டையில் மாந்தோப்பு வீதியில் உள்ளது. மேற்படி வீட்டை பார்த்து வாடகை வசூல் செய்து உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு பவர் ஏஜெண்டாக பாரதமணி மற்றும் மணிமங்கலம் நியமித்தார்கள். மேற்படி வீட்டின் கீழ் வீட்டில் எதிரி மற்றும் அவரது மகள் குடியிருந்தார்கள். மேற்படி வீட்டின் மேல் பகுதியில் சுந்தரம் என்பவர் குடியிருந்து வந்தார். மேல் வீட்டில் வசித்த நபரை எதிரியும் அவரது மகளும் சாதியை சொல்லி திட்டியதால் காலி செய்து விட்டு போய் விட்டார்கள்.

2. எதிரியை நான் தான் வீட்டில் குடிவைத்தேன். கடந்த 12.01.2021ம் தேதி மதியம் 1 மணியளவில் நவமணி என்பவர் தகவல் சொல்லி நான் வழக்கம் போல் வீட்டை பார்க்க வந்தேன். அப்போது நான் பார்த்த

போது கீழ் வீட்டில் சிண்டெக்ஸ், பல்புகள், பாத்ரூம் கதவு, லெட்டின் கதவு, பைப் லைன் எல்லாம் உடைந்து கிடந்தது. அப்போது எதிரி என்னையும், நவமணியையும் செல்போனில் போட்டோ எடுத்தார்கள். அப்போது நான் என் வீட்டையும் உடைத்துவிட்டு போட்டோவும் என்னை எதற்கு எடுக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு நான் சிவில் வழக்கு தொடுத்ததால் வீட்டையும் உடைப்பேன் என சொன்னார். அதன் பின்னர் என்னை திட்டினார். அதன் பின்னர் வீட்டிற்கு சென்று அருவாளை எடுத்து வந்து என்னை வெட்ட வந்தார்.

3. அப்போது என்னை கிளட்டு பயலே, மானங்கெட்ட பயலே என சொல்லி பவர்ஏஜெண்டு என இந்த பக்கம் வந்தால் உன் உயிர் என் கையால் தான் போகும் என வெட்ட வந்தார். சிவில் வழக்கு இருப்பதால் நீ என் வீட்டுப்பக்கம் வரக்கூடாது என சொன்னார். எதிரி அருவாளை எடுத்து போகும் போது என்னை சாட்சி நவமணி கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். அதன் பின்னர் நான் தேவகோட்டை நகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.1)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். சிண்டெக்ஸ், பல்புகள், பாத்ரூம் கதவு, லெட்டின் கதவு, பைப் லைன் எதிரி உடைத்ததை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சி நவமணி எந்த ஊர்காரர் என்றால் தேவகோட்டையில் காமாட்சி நகரில் குடியிருந்து வருகிறார். சாட்சி நவமணி வீட்டிற்கும் எதிரி குடியிருக்கு வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீட்டர் தூரம் இருக்கும். நவமணி எனது உறவினர் என்றால் சரிதான் எனது அக்கா மகள். இந்த வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பே எதிரி மீது மாண்புமிகு தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரியை வீட்டை விட்டு வெளியேற சொல்லி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2. எதிரி வாடகையை பிரச்சனைக்கு முன்பு முறையாக கொடுத்தார் என்றால் கொடுக்கவில்லை. சிண்டெக்ஸ், பல்புகள், பாத்ரூம் கதவு, லெட்டின் கதவு, பைப் லைன் ஆகியவை உடைந்தது சம்மந்தமாக போட்டோ போன்ற ஆவணங்களை கொடுத்தேனா என்றால் நாங்கள் எதுவும் கொடுக்கவில்லை போலீசார் வந்து பார்த்தார்கள். எதிரி அருவாளை எடுத்து வெட்ட வந்தது எதிரி வீட்டு முன்பு என்று சொன்னால் சரிதான். சாட்சி மீண்டும் மாற்றி

அருகாமையில் உள்ள சுவர் என சாட்சியம் அளிக்கிறார். பிரச்சனைக்கு முன்பே எதிரியை வீட்டை விட்டு காலி செய்ய சொல்லி மின்இணைப்பு மற்றும் தண்ணீர் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுத்து துண்டிக்கபட்டு விட்டது என்றால் நான் அவ்வாறு செய்யவில்லை. நான் மின்இணைப்பை துண்டிக்க சொல்லி நடவடிக்கை எடுத்ததால் என் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிரி மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் எனக்கு எந்த தகவலும் நீதிமன்றத்திலிருந்து வரவில்லை. எதிரி என்னை திட்டவில்லை என்றும், அருவாளை எடுத்து வெட்ட வரவில்லை என்றும் சிண்டெக்ஸ், பல்புகள், பாத்ரூம் கதவு, லெட்டின் கதவு, பைப் லைன் பொருட்களை எதையும் உடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.